
உ


ஸ்ரீ மஹாகணபதயே நம:

ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் ஸமேத ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரஸ்வாமி துணை

ஸ்ரீ பூமி நீளா ஸமேத ஸ்ரீ நீலமணி வரதராஜ பெருமாள் துணை











# ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் ஸேவா ஸமிதி ரிலிஜியஸ் டிரஸ்ட்

## தப்பளாம்புலியூர்

# ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் மற்றும் ஸ்ரீ வரதராஜ பெருமாள்

## ஆலயத் திருப்பணி வைபவப் பத்திரிக்கை

வந்தேவ்யாக்ரபுரீசானம்
வந்தே தேவவனேச்வரம்
வந்தே மதுவனேசானம்
வந்தே கல்யாணசுந்தரம்

இதிஸ்துவந்தி யேமர்த்யா:
தேவதேவ தினே தினே
தாரித்ரியம் நபவேத்
ஏஷாம் ஸத்யமேவ வதாம்யஹம்

மிகவும் பிரசித்தி பெற்றதாயும், க்ருத யுகத்தில், **"தற்பரவனம்"** மென்றும், த்ரேதாயுகத்தில் **"மதுவன"** மென்றும், துவாபர யுகத்தில் **"தேவவன"** மென்றும், கலியுகத்தில் **"வ்யாகரபுர"** மென்றும் சொல்லப்பட்டதாயுமுள்ளது **"தற்பரன்புலியூர்"** என்கிற **"தப்பளாம்புலியூர்"** கிராமம். இந்த கிராமம், தமிழ்நாட்டிலுள்ள திருவாரூர் என்ற நகரத்திலிருந்து சுமார் 5 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது.

மேற்படி திவ்ய க்ஷேத்திரத்தில் விளங்கி நிற்கும் ஆலயங்கள் ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் ஸமேத ஸ்ரீ வியாக்ர புரீஸ்வரர் ஸ்வாமி ஆலயம், மற்றும் ஸ்ரீபூமி நீளா ஸமேத ஸ்ரீ நீலமணி வரதராஜ பெருமாள் ஆலயம்.

மண்டூகம் (தப்பளி என்று சொல்லப்படும் தவளை), வ்யாக்ரம் (புலி) போன்ற ஸமஸ்த ஜீவராசிகளினாலும் பூஜிக்கப்பட்டு, தன்னுடைய கிருபாகடாக்ஷத்தால் சதுர்வித புருஷார்த்தங்களையும், தரிசனம் செய்தமாத்திரத்தில் வேண்டிய க்ஷேமலாபங்களை கொடுத்துக் கொண்டும், தற்பர மகரிஷி போன்ற மகரிஷிகளினால் பூஜிக்கப் பட்டவராகவும் இருப்பவர் **ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் ஸமேத ஸ்ரீ வ்யாக்ரபுரீஸ்வர ஸ்வாமி.**

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (ஸ்ரீ காஞ்சி பெரியவாள்) கூறியபடி, பாரததேசத்தில், வடக்கே சொல்லப்பட்ட உஜ்ஜயினி, மற்றும் தெற்கே ராமநாதபுரம் அருகேயுள்ள ஒரு கிராமம் ஆகிய இடங்களில், பிரசித்தியுடன் கூடிய வளாகத்தில் வீற்றிருப்பவள் ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் என்று கூறப்படும்,

**"சிவாபவானி ருத்ராணி சங்கரார்த்த சரீரணி**
**நித்யம் சகல கல்யாணி போக மோக்ஷ ப்ரதாயணி".**

அப்படிப்பட்ட பிரசித்தி பெற்ற ஆலயங்களுடன், தப்பளாம்புலியூர் கிராமத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ நித்யகல்யாணி அம்மனையும் ஒப்பிடலாம் என்பது ஸ்ரீ காஞ்சி பெரியவாளால் சொல்லப்பட்டதாகும்.

அப்படிப்பட்ட ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் ஸமேத ஸ்ரீ வ்யாக்ரபுரீஸ்வரர் ஆலயத்தின் சிறப்பு அம்சங்களில் சில:

1. கோவிலிலிருக்கும்சிவபெருமானின் சன்னதிக் கட்டிடம் சுமார் 900 ஆண்டுகள் பழைமையானதாக சரித்திர வாயிலாக அறியப்படுகிறது.
2. அபூர்வ மூர்த்தியான ஸ்ரீ ஏகபாத ருத்திர மூர்த்திக்கு, தட்சிணதேசத்திலேயே இந்த ஒரு ஆலயத்தில் தான் தனி சன்னதி அமைக்கப் பெற்றுள்ளது.
3. ஸ்ரீ நடராஜர் மூலஸ்தானமாக தனி சன்னதியில் காட்சியளிக்கிறார்.
4. சகல வித வியாதிகளையும் போக்க "ஜ்வரதேவர்" வீற்றிருப்பது ஒரு விசேஷமாகக் கருதப்படுகிறது.
5. படிப்பு, காலத்தில் விவாஹம், உயர்ந்தகுண குணதிசயங்கள், தம்பதிகளின் மிகப்ரீதி (அன்யோன்யம்) போன்றவைகளை அருளக்கூடிய ஸப்த கன்னிகை சன்னிதானம்.
6. சோழர்கால முறைப்படி, நவக்ரஹ சன்னதியில்லாமல் சூரியன் மற்றும் சனீஸ்வர பகவான்களுக்கு தனி சன்னதி.

7. எலும்பு முறிவு மற்றும் கை கால் ஸ்வாதீனமில்லாமை போன்ற வியாதிகளை போக்கும் காலபைரவர் சன்னதி.

8. கிழக்குப் புறமாக பார்த்துக்கொண்டு அனுக்ரஹ மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சனீஸ்வர பகவான்.

9. சதுர்புஜங்களுடன், சங்கு சக்கரங்களை இரண்டு கைகளில் கொண்டிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவி துர்க்கையம்மன்.

மேலும் ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன், பாரததேசத்திலும் மற்றும் வெளிநாட்டிலும் வசித்துவரும் பல குடும்பங்களுக்கு குல தெய்வமாக விளங்குகிறார். இதனால் இந்த ஆலயத்திற்கு பலபேர்கள் வந்து பிரார்த்தனை செய்து சகல க்ஷேமங்களையும் அடைகிறார்கள்.

இந்த தப்பளாம்புலியூரில் இருக்கும் மற்றொரு பிரசித்தி பெற்ற ஆலயம் **ஸ்ரீ பூமி நீளா ஸமேத ஸ்ரீ நீலமணி வரதராஜப் பெருமாள் ஸ்வாமி ஆலயம்.** கிராமத்தின் மேற்குப் புறத்தில் கம்பீர காட்சியளிக்கும் பெருமாளின் ஆலயத்தின் ஒரு சிறப்பு அம்சமாக, ஆலயத்தின் வடக்கு, தெற்கு இரண்டு புறங்களிலும் ஸ்ரீ மஹாகணபதி ஸன்னிதானம் முன்பு இருந்ததாக முதியோர்களால் கூறப்படுகிறது.

மேற்கூறிய ஆலய திருப்பணி மற்றும் கும்பாபிஷேக வைபவம் நடைபெற்று 13 வருடங்களுக்கு மேல் ஆகிய நிலையில், தற்போது மிகவும் பழமையானதாகவும் குறிப்பிட்ட சில இடங்கள் சிதலமடைந்த நிலையில் உள்ளது.

இத்தகைய நிலையில், நமது தப்பளாம்புலியூர் கிராமத்தின் ஆலயங்களை சரிவர பராமரித்து, தினப்படி பூஜைகள் மற்றும் விசேஷம் நடத்துவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள **"SRI NITHYAKALYANI AMMAN SEVA SAMITHI RELIGIOUS TRUST" (SNASS Religious Trust),**

(விவரங்களுக்கு **http://sites.google.com/site/thappalampuliyur/** என்னும் வெப்சைட்டை பார்க்கவும்). அதன் அங்கத்தினர்கள், கிராமவாசிகள், தெய்வ ஈடுபாடுள்ள பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசினர் எல்லோருடைய தாராள உதவிகளுடன், மேற்கூறிய இரண்டு ஆலயங்களின் திருப்பணி, மற்றும் வேலைகளை தொடங்கி 8 முதல் 10 மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய உத்தேசித்திருக்கிறது.

**SNASS Religious Trust**-ன் திருப்பணிக்குழு இதற்கான செலவுகளை, சன்னதி வாரியாகவும், இதர வேலைகள் வாரியாகவும் விரிவான முறையில் மதிப்பிட்டிருக்கிறார்கள். இதன்மூலம் திருப்பணிக்காக **ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் கோவிலுக்கு ஆகும் சிலவு சுமாராக 35.00 லக்ஷம் ரூபாய் என்றும், ஸ்ரீ வரதராஜ பெருமாளுக்கு ஆகும் சிலவு சுமாராக 17.00 லக்ஷம் ரூபாய் என்றும் (மொத்தம் 52 லக்ஷம் ரூபாய்)** என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தாராளமனமுடைய ஆஸ்திக பெருமக்கள், மற்றும் தொண்டு நிறுவனங்கள் இந்த ஒரு மிகப் பெரிய காரியத்திற்கு பேருதவியாக இருந்து, பொருளுதவியை தருமாறு **SNASS Religious Trust** கேட்டுக் கொள்கிறது. இதன்மூலம் தாங்கள் தங்கள் குடும்பங்கள், மற்றும் தாங்கள் வம்சங்கள் எல்லோரும் சகலவிதமான க்ஷேமங்களையும் அடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

மேலும் சன்னதிவாரியாகவோ, அல்லது இதர வேலைகளை மொத்தமாக ஏற்றுக் கொண்டு, இந்த மிகப்பெரிய காரியத்துக்கு உறுதுணையாக இருக்க விருப்பப்படும் ஆஸ்திக பெருமக்கள், மற்றும் தொண்டு நிறுவனங்கள் கீழ்கண்ட தொலைபேசி எண்கள் அல்லது இமெயிலில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். (பட்டியல் தனியாக இணைக்கப்பட்டுள்ளது)

**1) 098400 36514 / 044 - 2431 1096, 2) 095510 66125, 3) 092821 49640.**
**or email to snasstpuliyur@gmail.com**

அவ்வாறு நன்கொடை அனுப்பும் போது, தயவு செய்து **"திருப்பணி நன்கொடை"** என்று குறிப்பிட்டு அனுப்பவும்

நன்கொடை அனுப்புவதற்கான விபரங்கள் :

***By Cheque / D.D. Payable to***
**"SNASS RELIGIOUS TRUST"**
*Address :* C/o. Mr. T.P. Vaidyanathan
Apt. No. 2, RAJ RESIDENCY
No. 6/9, Seethammal Colony,
1st Main Road, Alwarpet,
Chennai-600 018.
☎: 044-2431 1096

***Via Bank Transfer***
**"SNASS RELIGIOUS TRUST"**
**A/c. No. 112-001-00-1397843**
**CITY UNION BANK,**
*Branch :* Purasawakkam, Chennai-84.
NEFT - CIUB 0000112
***with an intimation to :***
tpvraman@yahoo.com
vaidehi.krishnamurthy@gmail.com
snasstpuliyur@gmail.com

*By*
**Gramavaasigal of Thappalampuliyur and SNASS Religious Trust**

## LIST OF SANNADHIS & OTHER ACTIVITIES OF THIRUPPANI WORKS / கும்பாபிஷேக ஸன்னதிகள் மற்றும் இதர வேலைகளின் விவரங்கள்

### A Arulmigu Sri Nithyakalyani Amman sametha Vyaagrapureeswarar temple
### அ. அருள்மிகு ஸ்ரீநித்யகல்யாணி அம்மன் ஸமேத ஸ்ரீ வ்யாக்புரீஸ்வரர் கோவில்

1. Arulmigu Vinayagar Sannathi / அருள்மிகு விநாயகர் ஸன்னதி
2. Arulmigu Saptha Kanni Sannathi / அருள்மிகு ஸப்த கன்னிகை ஸன்னதி
3. Arulmigu Natarajar & Arulmigu Dakshinamoorthy Sannathi / அருள்மிகு நடராஜர் - அருள்மிகு தக்ஷிணாமூர்த்தி ஸன்னதி
4. Arulmigu Maha Lakshmi Sannathi / அருள்மிகு மஹா லக்ஷ்மி ஸன்னதி
5. Arulmigu Subramanyar Sannathi / அருள்மிகு ஸுப்ரமண்யர் ஸன்னதி
6. Arulmigu Chandikeswarar Sannathi / அருள்மிகு சண்டிகேஸ்வரர் ஸன்னதி
7. Arulmigu Vaishnavi Durgai Amman Sannathi / அருள்மிகு வைஷ்ணவி துர்கை அம்மன் ஸன்னதி
8. Arulmigu Eka Patharudrar Sannathi / அருள்மிகு ஏகபாதருத்ரர் ஸன்னதி
9. Arulmigu Bairavar & Arulmigu Suryan Sannathi / அருள்மிகு பைரவர் - அருள்மிகு சூரியன் ஸன்னதி
10. Arulmigu Saneeeswara Bhagavan / அருள்மிகு சனீஸ்வர பகவான் ஸன்னதி
11. Arulmigu Somaskandar Sannathi / அருள்மிகு ஸோமாஸ்கந்தர் ஸன்னதி
12. Arulmigu Uthsava Moorthy Sannathi / அருள்மிகு உத்ஸவமூர்த்திகள் ஸன்னதி
13. Arulmigu Vyagrapureeswarar Sannathi / அருள்மிகு வ்யாக்ரபுரீஸ்வரர் ஸன்னதி
14. Arulmigu Nithyakalyani Amman Sannathi / அருள்மிகு நித்யகல்யாணி அம்மன் ஸன்னதி
15. Praharam of Swami and Ambal Sannathi/ஸ்வாமி மற்றும் அம்பாள் ஸன்னதி பிரஹாரம்
16. Repairing & Painting the arch dome roof / மேல் கூறை வண்ணம்பூசல்
17. Out Side Praharam / வெளி ப்ராஹாரம்
18. Mathil Wall / மதில் சுவர்
19. Manimandapam, Madapalli and Bore Well & Connected Pipe Lines etc. மணி மண்டபம், மடைப்பள்ளி மற்றும் போர்வெல் மற்றும் பைப்புகள்
20. Electrification Complete / மின்சார இணைப்புகள்

### B Arulmigu Sri Bhoomi Neelaa Sametha Sri Neelamani Varadharaja Perumal Temple
### ஆ அருள்மிகு ஸ்ரீ பூமிநீளா ஸமேத ஸ்ரீ நீலமணி வரதராஜ பெருமாள் கோவில்

1. Gharbhagraham, Vimanam and outside of Sannathi/ கர்ப்பக்கிரஹம், விமானம் மற்றும் சன்னதி வெளிப்புறம்.
2. Ardha Mandapam, Maha Mandapam and Garuda Mandapam (Outside/Inside) / அர்த்த மண்டபம், மஹா மண்டபம் மற்றும் கருட மண்டபம் (உள்ளே மற்றும் வெளியே)
3. Outside Prahaaram and other works / வெளிப் பிரகாரம் மற்றும் இதர வேலைகள்
4. Mathil Wall / மதில் சுவர்
5. Electrification Complete / மின்சார இணைப்புகள்